ரூ.667 கோடியில் டோர்னியர் விமானங்கள்

ஹெச்ஏஎல் உடன் பாதுகாப்பு அமைச்சகம் ஒப்பந்தம்

புது தில்லி, மார்ச் 10: இந்திய விமானப் படையின் பயன்பாட்டுக்காக 6 டோர்னியர் விமானங்களைக் கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தம் ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனம் (ஹெச்ஏஎல்), மத்திய பாதுகாப்பு அமைச்சகம் இடையே வெள்ளிக்கிழமை கையொப்பமானது.

இந்த ஒப்பந்தம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சகம் வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டதாவது:

இந்திய விமானப் படைக்காக ஹெச்ஏஎல் நிறுவனத்திடம் இருந்து ரூ.667 கோடியில் 6 டோர்னியர்-228 ரக விமானங்களைக் கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தம் வெள்ளிக்கிழமை கையொப்பமானது.

எளிதில் அணுக முடியாத தொலைதூர பகுதிகளில் இந்திய விமானப் படையின் செயல்பாடுகளை இந்த 6 டோர்னியர் விமானங்கள் அதிகரிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

டோர்னியர்-228 ரக விமானம் பல்வேறு செயல்பாடுகளில் ஈடுபடும் திறன் மிக்க இலகு ரக விமானமாகும். போக்குவரத்து, கடல்சார் பாதுகாப்புக்கான கண்காணிப்பு உள்ளிட்ட பணிகளில் பயன்படுத்தப்படும் வகையில் இந்த விமானம் தயாரிக்கப்பட்டது. இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்கள், தீவுப் பகுதிகள் ஆகியவற்றில் குறைந்த தூர பயணங்களுக்கு இந்த விமானம் மிகவும் ஏற்றது.

பிரிட்டனில் நீரவ் மோடியின் வழக்கு கட்டணம், அபராதம் ரூ.1.5 கோடி

தவணை முறையில் செலுத்த லண்டன் நீதிமன்றம் அனுமதி

லண்டன், மார்ச் 10: தன்னை நாடு கடத்தும் உத்தரவுக்கு எதிராக நடைபெற்ற வழக்கின் நீதிமன்றக் கட்டணம் உள்ளிட்ட தொகையை செலுத்த தன்னிடம் பணமில்லை என்று தொழிலதிபர் நீரவ் மோடி, பிரிட்டன் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் தெரிவித்தார். தான் கடன் வாங்கி வருவதாக அவர் தெரிவித்த நிலையில், நீதிமன்ற கட்டணங்கள், அபராதங்கள் தொகையை தவணை முறையில் மாதந்தோறும் 10,000 பவுண்டுகளாக (சுமார் ரூ.9.7 லட்சம்) செலுத்த அவருக்கு மாஜிஸ்திரேட் நீதிமன்றம் அனுமதி அளித்தது.

தொழிலதிபர் நீரவ் மோடி சுமார் ரூ.16,000 கோடி வங்கிக் கடன் மோசடியில் ஈடுபட்டு தலைமறைவானார். அவர் இந்தியாவிலிருந்து தப்பிச்சென்ற நிலையில், கடந்த 2019-ஆம் ஆண்டு பிரிட்டன் தலைநகர் லண்டனில் கைது செய்யப்பட்டார். அங்குள்ள வாண்ட்ஸ்வர்த் சிறையில் அடைக்கப்பட்டுள்ள அவரை, இந்தியாவுக்கு நாடு கடத்த அந்நாட்டு மாஜிஸ்திரேட் நீதிமன்றம் உத்தரவிட்டது. அதன் அடிப்படையில், அவரை நாடு கடத்த பிரிட்டனின் அப்போதைய உள்துறை அமைச்சர் ப்ரீத்தி படேல் உத்தரவிட்டார்.

இந்த உத்தரவுக்கு எதிராக பிரிட்டன் உயர் நீதிமன்றத்தில் நீரவ் மோடி மேல்முறையீடு செய்தார். அவரின் மனுவை அந்த நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. இதனைத் தொடர்ந்து பிரிட்டன் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யக் கோரி அளித்த மனுவை உயர் நீதிமன்றம் கடந்த ஆண்டு டிசம்பரில் நிராகரித்தது. மேலும், நீதிமன்ற கட்டணங்கள், அபராத தொகையாக ஒன்றரை லட்சம் பவுண்டுகளை (சுமார் ரூ.1.50 கோடி) செலுத்த நீரவ் மோடிக்கு உத்தரவிட்டது.

இந்த தொகையை மாதந்தோறும் 10,000 பவுண்டுகளாக (சுமார் ரூ.9.7 லட்சம்) செலுத்த அவர் கோரிய நிலையில், அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. எந்த தொகையையும் இதுவரை செலுத்தாத நிலையில், அது தொடர்பாக லண்டனில் உள்ள மாஜிஸ்திரேட் நீதிமன்றம் வியாழக்கிழமை விசாரணை மேற்கொண்டது. அப்போது நீரவ் மோடி காணொலி வழியாக விசாரணைக்கு ஆஜராகி, தனது சொத்துகள் இந்தியாவில் முடக்கப்பட்டுள்ளதாகவும், இதனால் தொகையை செலுத்த தன்னிடம் போதிய பணம் இல்லை என்றும் தெரிவித்தார்.

இதனைக் கேட்ட நீதிமன்றம், ஏற்கெனவே கூறியபடி கட்டணங்கள் மற்றும் அபராதத் தொகையை மாதந்தோறும் 10,000 பவுண்டுகளாக செலுத்துவதற்கான பணம் எங்கிருந்து அவருக்குக் கிடைக்கும் என்று கேள்வி எழுப்பியது. அதற்குத் தான் கடன் வாங்கி வருவதாகவும், கடந்த 2 ஆண்டுகளாக அதைச் செய்து வருவதாகவும் பதிலளித்தார்.

இதையடுத்து, நிலுவைத் தொகையை மாதந்தோறும் 10,000 பவுண்டுகளாக செலுத்த அவருக்கு நீதிமன்றம் அனுமதி அளித்தது.

நாடு கடத்துவதற்கு எதிராக பிரிட்டன் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய உயர் நீதிமன்றம் அனுமதி மறுத்தபோதிலும், ஐரோப்பிய மனித உரிமைகள் நீதிமன்றத்தை நீரவ் மோடி அணுகுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகக் கூறப்படுகிறது.

இதனால் அவர் எப்போது இந்தியாவுக்கு நாடு கடத்தப்படுவார் என்பது தெரியவில்லை என்று பிரிட்டன் உள்துறை அமைச்சக அதிகாரிகள் தெரிவித்தனர்.

முன்னாள் அக்னி வீரர்களுக்கு பிஎஸ்எஃப் வேலைவாய்ப்பில் 10% இடஒதுக்கீடு

மத்திய அரசு

புது தில்லி, மார்ச் 10: அக்னி வீரர்கள் திட்டத்தின் கீழ் பணியாற்றிய முன்னாள் வீரர்களுக்கு எல்லைப் பாதுகாப்புப் படை (பிஎஸ்எஃப்) வேலைவாய்ப்பில் 10 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சகம் அறிவித்தது.

வயது உச்சவரம்பு தளர்வுடன் இவர்களுக்கு இந்த வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

எல்லைப் பாதுகாப்புப் படை பணியாளர் தேர்வு விதிகள் 2015-இல் இதற்கென தேவையான சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட பிறகு அறிவிக்கை மூலமாக இந்த அறிவிப்பை மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்டது. வியாழக்கிழமை முதல் இந்த புதிய நடைமுறை அமலுக்கு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

'இந்த புதிய நடைமுறையின் கீழ், முதல் பிரிவு தேர்வில் பங்கேற்கும் முன்னாள் அக்னி வீரர்களுக்கு வயது உச்சவரம்பு 5 ஆண்டுகள் வரை தளர்வு அளிக்கப்படும். அடுத்தடுத்து பிரிவு தேர்வுகளில் பங்கேற்பவர்களுக்கு 3 ஆண்டுகள் வரை தளர்வு அளிக்கப்படும்.

இந்தத் தேர்வின்போது உடல் திறன் தகுதித் தேர்விலிருந்தும் முன்னாள் அக்னிவீரர்களுக்கு தளர்வு அளிக்கப்படும்' என்றும் அந்த அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

பாதுகாப்புப் படைகளுக்கான வீரர்கள் தேர்வில் புதிய பெரும் சீர்திருத்த நடவடிக்கையாக மத்திய அரசு கடந்த ஆண்டு ஜூன் 14-ஆம் தேதி அறிமுகம் செய்த 'அக்னிபத்' திட்டத்தை இந்திய ராணுவம் நடைமுறைப்படுத்தி வருகிறது. 17.5 வயது முதல் 21 வயது வரையுடைய இளைஞர்கள் இதற்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் என முதலில் அறிவிக்கப்பட்டது.

பின்னர், 2022-ஆம் ஆண்டு வீரர்கள் தேர்வின்போது வயது உச்சவரம்பு 23-ஆக உயர்த்தப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்படும் அக்னி வீரர்கள், 4 ஆண்டுகள் குறுகியகால பணியில் ராணுவத்தில் பணியமர்த்தப்படுவர். இவர்களில் தகுதியான 25 சதவீதம் பேர், முப்படைகளிலும் தொடர்ந்து பணியாற்ற அனுமதிக்கப்படுவர். மற்றவர்கள், ராணுவத்தில் தொடர்ந்து பணியாற்ற முடியாது.

எனினும், 'ராணுவ பணியிலிருந்து விடுவிக்கப்படும் 75 சதவீத அக்னிவீரர்களுக்கு மத்திய துணை ராணுவப் படைகள் மற்றும் அஸ்ஸாம் ரைஃபிள்ஸ் படைப் பிரிவுகளின் வேலைவாய்ப்பில் வயது உச்சவரம்பு தளர்வு சலுகையுடன் 10 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்படும்' என்று மத்திய உள்துறை அமைச்சகம் அப்போது அறிவித்தது.

இந்த அறிவிப்பின் மூலமாக, அக்னிபத் திட்டத்தின் மூலமாக அதிகபட்ச வயது உச்சவரம்பான 21 வயதில் ராணுவத்தில் சேர்ந்து 4 ஆண்டுகள் பணியாற்றி விடுவிக்கப்பட்ட அக்னி வீரர்கள், முதல் பிரிவு தேர்வின் கீழ் 30 வயது வரை பிஎஸ்எஃப்-இல் சேர முடியும். அடுத்தடுத்த பிரிவு தேர்வுகளில் பங்கேற்பவர்கள் அதிகபட்சமாக 28 வயது வரை பிஎஸ்எஃப்-இல் சேர முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

வழக்கமான நடைமுறைகளின்படி, பிஎஸ்எஃப் உள்ளிட்ட துணை ராணுவப் படைகளில் 18 முதல் 23 வயது வரை மட்டுமே வேலைவாய்ப்புகளில் சேர முடியும்.

சட்டவிரோத பணப் பரிவர்த்தனை தடுப்புச் சட்டத்தில் திருத்தம்

புது தில்லி, மார்ச் 10: அரசியல் ரீதியில் நிதி முறைகேடுப் புகார்களில் சிக்கும் நபர்களையும் சட்டவிரோத பணப் பரிவர்த்தனை தடுப்புச் சட்ட (பிஎம்எல்ஏ) கண்காணிப்பில் கொண்டு வரும் வகையில், அதில் திருத்தங்களை மத்திய அரசு மேற்கொண்டது.

இந்தச் சட்டத் திருத்தத்தின்படி, அரசியல் ரீதியில் குற்றச்சாட்டுக்கு ஆளாகும் நபர்களின் நிதிப் பரிவர்த்தனைகளை வங்கிகள், நிதி நிறுவனங்கள், ரியல் எஸ்டேட், நகை விற்பனைத் துறையில் ஈடுபடும் நிறுவனங்கள் உள்ளிட்ட நிறுவனங்கள் பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட்டது.

அதுபோல, அரசு சாரா தன்னார்வ அமைப்புகள் (என்ஜிஓ) அல்லது லாப நோக்கற்ற அமைப்புகளின் நிதிப் பரிவர்த்தனை தகவல்களை நிதி நிறுவனங்கள் சேகரிப்பதும் கட்டாயமாக்கப்பட்டது.

திருத்தப்பட்ட பிஎம்எல் விதிகளின்படி அரசியல் ரீதியில் நிதி முறைகேடு புகார்களில் சிக்கும் நபர்களுக்கான விளக்கத்தையும் மத்திய நிதியமைச்சகம் தெரிவித்தது. அதன்படி, வெளிநாடுகளால் நடத்தப்படும் பொது நிகழ்வுகளில் முன்னணி வகிக்கும் மாநில அரசின் தலைமைப் பொறுப்பை வகிக்கும் நபர்கள் உள்ளிட்டோர், மூத்த அரசியல்வாதிகள், மூத்த அரசு அல்லது நீதித் துறை அல்லது ராணுவ அதிகாரிகள், மாநில அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் மூத்த அதிகாரிகள், முக்கிய அரசியல் கட்சிகளின் அதிகாரிகள் ஆகியோர் அரசியல் ரீதியில் முறைகேடு புகார்களில் சிக்கும் நபர்களாக குறிப்பிடப்பட்டது.

இந்த நபர்கள் மற்றும் என்ஜிஓ-க்களின் நிதி பரிவர்த்தனை பதிவுகளை வங்கிகள், நிதி நிறுவனங்கள் பராமரிப்பதோடு மட்டுமின்றி, அமலாக்கத் துறை இயக்குநரகம் சார்பில் கேட்கப்படும்போது அந்த விவரங்களை அளிப்பதும் இந்த சட்டத் திருத்தம் மூலமாக கட்டாயமாக்கப்பட்டது.

நிதி நிறுவனங்கள் அவர்களின் தன்னார்வ அமைப்பு வாடிக்கையாளர் விவரங்களை நீதி ஆயோக்கின் 'தர்ப்பண்' வலைதளத்தில் பதிவு செய்வதோடு, அத்தகைய வாடிக்கையாளரின் கணக்குப் பதிவுகளை 5 ஆண்டுகளுக்கு பராமரிப்பதும் கட்டாயமாக்கப்பட்டது.

equitas — எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்
பெருநிறுவன அலுவலகம்: எண்.769, ஸ்பென்சர் பிளாசா, 4வது தளம், பேஸ் II, அண்ணாசாலை, சென்னை, தமிழ்நாடு - 600002

சுவாதீன அறிவிப்பு அசையா சொத்துக்களுக்கு விதி 8 (1)

கீழ் கையொப்பமிட்டுள்ளவர் எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அதிகாரப்பூர்வ அலுவலராக இருக்கின்றபடியால் 2002ம் (54/2002) ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துக்களைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச்சட்டம் பிரிவு 13(12)ன் கீழும், அதற்குத் தொடர்புடைய 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள் 3-ன் கீழும் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழ்க்காணும் கடன்தாரர்களுக்கு / ஜாமீன்தாரர்களுக்கு கீழே குறிப்பிட்டுள்ள தேதியிட்ட கோரிக்கை அறிவிப்புகளை அனுப்பி அந்த அறிவிப்பு கிடைத்த 60 நாட்களுக்குள் அந்தந்த கோரிக்கை அறிவிப்புகளில் குறிப்பிட்டுள்ள செலுத்த வேண்டியுள்ள கடன் பாக்கிகளைச் செலுத்துமாறு கோரப்பட்டது. ஆனால், கடன்தாரர்கள் கீழ்குறிப்பிட்டுள்ள பாக்கி தொகையை முழுவதும் செலுத்த தவறிவிட்டதால் கடன்தாரர்களுக்கும் / ஜாமீன்தாரர்களுக்கும் / பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது யாதெனில் மேற்படி சட்டம் 13 (4) மற்றும் அதற்குத் தொடர்புடைய மேற்படி விதி 8-ன் கீழ் தாது அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை அதிகாரப்பூர்வ அலுவலர் தமது சுவாதீனத்தில் எடுத்துக் கொண்டுள்ளார். எனவே முக்கியமாக கடன்தாரர்களுக்கும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனமாகியுள்ள மேற்படி அடமான சொத்து விஷயத்தில் எவரும் எவ்வித பேரமோ / நடவடிக்கையோ வைத்துக் கொள்ள கூடாது. மீறி வைத்துக் கொண்டால் அது எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-க்கு கீழே குறிப்பிட்டவாறு தொகைகளுடன் அதற்குண்டான வட்டி மற்றும் பிற செலவுகள் சேர்த்து செலுத்துவதற்கு கட்டுப்பட்டதாகும். சட்டப் பிரிவு 13 துணை பிரிவு 8-ன் படி கடனீட்டு சொத்துக்களை மீட்டு கொள்வதற்கு கால அவகாசம் உள்ளது என்று கடன்தாரரின் கவனத்திற்கு கொண்டு வரப்படுகிறது.

கடன்தாரர் / இணை கடன்தாரர் பெயர்	கடனீட்டுச் சொத்துக்களின் விவரங்கள் (அசையா சொத்து / கள்)	
கிளை : தேனி; கணக்கு எண். SEIBTNI0298567; கடன்தாரர்கள் : 1. அழகுமுத்து A. 2. வெள்ளையம்மாள் A 3. கருப்பசாமி A	பெரியகுளம் பதிவு மாவட்டம் மற்றும் ஆண்டிப்பட்டி துணை பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி தாலுக்கா, பாலகோம்பை கிராமம், சர்வே எண்.146/7A-ன்படி 264 சதுர அடி நிலம். மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும் மற்றும் எல்லைகள்: வடக்கில்: ஹாஸ்பிடல் சாலை, தெற்கில்: சுவர், கிழக்கில்: சாலை, மேற்கில்: திரு.மருதமுப்பர் அவர்களின் இடம், அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு பகுதியில்: 22 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பகுதியில்: 22 அடி, வடக்கு தெற்காக கிழக்கு பகுதியில்: 12 அடி, வடக்கு தெற்காக மேற்கு பகுதியில்: 12 அடி. இந்த சொத்து பெரியகுளம் பதிவு மாவட்டம் மற்றும் ஆண்டிப்பட்டி துணை பதிவு மாவட்டத்திற்கு உட்பட்டது.	
	கோரிக்கை அறிவிப்பு தேதி/தொகை 28-12-2022 & ரூ.2,68,378/-	சுவாதீன தேதி 06-03-2023
கிளை : தேனி; கணக்கு எண். SEIBTNI0298692; கடன்தாரர்கள் : 1. செல்லபாண்டியன் G. 2. குபேந்திரன் M 3. ஈஸ்வரி G	வகை-1: பெரியகுளம் பதிவு மாவட்டம் மற்றும் கடமலைகுண்டு துணை பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட தேனி மாவட்டம், மயிலாடும்பாறை கிராமம், கதவு எண்.3/146, வார்டு எண்.9, வருசநாடு சர்வே எண்.552/4-ன்படி 630 சதுர அடி நிலம். மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும் மற்றும் எல்லைகள்: வடக்கில்: கிழக்கு மேற்கான பொது வழி, தெற்கில்: கிழக்கு மேற்கான பொது வழி, கிழக்கில்: திரு.அய்யனார் அவர்களுக்கு சொந்தமான வீடு, மேற்கில்: திரு.வனம் அவர்களுக்கு சொந்தமான காலி நிலம், அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு பகுதியில்: 18 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பகுதியில்: 18 அடி, வடக்கு தெற்காக கிழக்கு பகுதியில்: 35 அடி, வடக்கு தெற்காக மேற்கு பகுதியில்: 35 அடி. இந்த சொத்து பெரியகுளம் பதிவு மாவட்டம் மற்றும் கடமலைகுண்டு துணை பதிவு மாவட்டத்திற்கு உட்பட்டது. வகை-2: பெரியகுளம் பதிவு மாவட்டம் மற்றும் கடமலைகுண்டு துணை பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட தேனி மாவட்டம், மயிலாடும்பாறை கிராமம், வார்டு எண்.9, டிரான்பார்மர் தெரு, வருசநாடு, பழைய சர்வே எண்.1580/5, புதிய சர்வே எண்.1580/5A-ன்படி 875 சதுர அடி நிலம். மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும் மற்றும் எல்லைகள்: வடக்கில்: 10 அடி கிழக்கு மேற்கான பொது வழி, தெற்கில்: 10 அடி கிழக்கு மேற்கான பொது வழி, கிழக்கில்: திரு.ராயர்கோட்டை நாகராஜ் அவர்களுக்கு சொந்தமான வீடு, மேற்கில்: திரு.குபேந்திரன் அவர்களுக்கு சொந்தமான வீடு, அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு பகுதியில்: 25 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பகுதியில்: 25 அடி, வடக்கு தெற்காக கிழக்கு பகுதியில்: 35 அடி, வடக்கு தெற்காக மேற்கு பகுதியில்: 35 அடி. இந்த சொத்து பெரியகுளம் பதிவு மாவட்டம் மற்றும் கடமலைகுண்டு துணை பதிவு மாவட்டத்திற்கு உட்பட்டது.	
	கோரிக்கை அறிவிப்பு தேதி/தொகை 28-12-2022 & ரூ.9,20,158/-	சுவாதீன தேதி 06-03-2023
கிளை : தேனி; கணக்கு எண். SEIBTNI0317491; கடன்தாரர்கள் : 1. சரவணதாஸ் D. 2. தவமணி B	பெரியகுளம் பதிவு மாவட்டம் மற்றும் தேனி துணை பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட தேனி மாவட்டம், கோவிந்த நகரம் கிராமம், தத்தம் சர்வே எண்.53/3B, புதிய சர்வே எண்.53/21-ன்படி 475 சதுர அடி நிலம். மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும் மற்றும் எல்லைகள்: வடக்கில்: திரு.பழனிசாமி அவர்களுக்கு சொந்தமான வீடு, தெற்கில்: திருமதி.ஜெக்கம்மாள் அவர்களுக்கு சொந்தமான நிலம், கிழக்கில்: தெற்கு வடக்கான தெரு, மேற்கில்: திரு.மணிகண்டன் அவர்களுக்கு சொந்தமான வீடு, மொத்தம் 475 சதுர அடி. இந்த சொத்து பெரியகுளம் பதிவு மாவட்டம் மற்றும் தேனி துணை பதிவு மாவட்டத்திற்கு உட்பட்டது.	
	கோரிக்கை அறிவிப்பு தேதி/தொகை 28-12-2022 & ரூ.3,53,086/-	சுவாதீன தேதி 06-03-2023
கிளை : தேனி; கணக்கு எண். SEIBTNI0325256; கடன்தாரர்கள் : 1. பொன்னுதுரை T. 2. ரோஸ்லின் T 3. சரோஜா T 4. தங்கசாமி P	பெரியகுளம் பதிவு மாவட்டம் மற்றும் ஆண்டிப்பட்டி துணை பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி கிராமம், மணியகாரன்பட்டி சர்வே எண்.1118/1A1-ன்படி 900 சதுர அடி நிலம். மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும் மற்றும் எல்லைகள்: வடக்கில்: திரு.செல்லதுரை அவர்களுக்கு சொந்தமான நிலம், தெற்கில்: கிழக்கு மேற்கான பொது வழி, கிழக்கில்: திரு.மாசிலாமணி அவர்களுக்கு சொந்தமான நிலம், மேற்கில்: திரு.இயேசு ராஜா அவர்களுக்கு சொந்தமான நிலம், அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு பகுதியில் 22.5 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பகுதியில் 22.5 அடி. இந்த சொத்து பெரியகுளம் பதிவு மாவட்டம் மற்றும் ஆண்டிப்பட்டி துணை பதிவு மாவட்டத்திற்கு உட்பட்டது.	
	கோரிக்கை அறிவிப்பு தேதி/தொகை 28-12-2022 & ரூ.2,34,891/-	சுவாதீன தேதி 07-03-2023
கிளை : K.K. நகர் மதுரை; கணக்கு எண். SEKKMDU0288610; கடன்தாரர்கள் : 1. புலிம்மாள் 2. ஜெயபாண்டி	மதுரை தெற்கு பதிவு மாவட்டம் மற்றும் மதுரை இணை எண்.4 துணை பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட மதுரை மாவட்டம், மதுரை வடக்கு தாலுகா, கோவில் பாப்பாகுடி கிராமம், கதவு எண்.2/261A, பட்டா எண்.204/80A சர்வே எண்.87/3-ன்படி மனை எண்.33-ல் உள்ள 870 சதுர அடி நிலம் மற்றும் பொது வழி. மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும் மற்றும் எல்லைகள்: வடக்கில்: தங்கமணி அவர்களின் வீடு, தெற்கில்: பெரியபாண்டி அவர்களின் வீடு, கிழக்கில்: வடக்கு தெற்கான சாலை, மேற்கில்: பாண்டியராஜ் அவர்களின் வீடு, அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கில் 20 அடி, தெற்கில் 20 அடி, வடக்கு தெற்காக கிழக்கில்: 43.50 அடி, மேற்கில்: 43.50 அடி, மொத்தம் 870 சதுர அடி. இந்த சொத்து மதுரை தெற்கு பதிவு மாவட்டம் மற்றும் மதுரை இணை எண்.4 துணை பதிவு மாவட்டத்திற்கு உட்பட்டது.	
	கோரிக்கை அறிவிப்பு தேதி/தொகை 26-12-2022 & ரூ.3,08,527/-	சுவாதீன தேதி 05-03-2023
கிளை : திருநகர்; கணக்கு எண். SETIRNR0280254; கடன்தாரர்கள் : 1. சசிகலா 2. ராஜா	மதுரை வடக்கு பதிவு மாவட்டம் மற்றும் மதுரை வடக்கு துணைபதிவு மாவட்டத்திற்குட்பட்ட சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தாலுகா, கிள்ளனேரி கிராமம், சர்வே எண்.39/1-ன்படி 793 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம், மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும் மற்றும் எல்லைகள்: வடக்கில்: பம்பையன் அவர்கள் சுவாதீனத்தில் உள்ள நிலம் மற்றும் 3 அடி நடைபாதை, தெற்கில்: பம்பையன் அவர்களுக்கு சொந்தமான காலி நிலம் கிழக்கில்: 3 அடி நடைபாதை மற்றும் பொது சந்து, மேற்கில்: முசன்குண்டு அவர்களின் எல்லை. இந்த சொத்து மதுரை வடக்கு பதிவு மாவட்டம் மற்றும் மதுரை வடக்கு துணைபதிவு மாவட்டத்திற்குட்பட்டது.	
	கோரிக்கை அறிவிப்பு தேதி/தொகை 26-12-2022 & ரூ.2,77,181/-	சுவாதீன தேதி 05-03-2023
கிளை : திருநகர்; கணக்கு எண். SETIRNR0330363; கடன்தாரர்கள் : 1. ஜெயமாலினி 2. கோட்டைசாமி	மதுரை தெற்கு பதிவு மாவட்டம் மற்றும் திருமங்கலம் துணைபதிவு மாவட்டத்திற்குட்பட்ட மதுரை மாவட்டம், திருமங்கலம் தாலுகா, செங்கப்படை பிட் 1 கிராமம், அயன் புஞ்சை சர்வே எண் 49/2-ன்படி மொத்தம் உள்ள 7412 சதுர அடியில் 236 சதுர அடி (21.96 சதுர மீட்டர்) மற்றும் 2871 சதுர அடி (256.5 சதுர மீட்டர்) (தெற்கு பகுதியில் உள்ள மேற்கு பகுதி) நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் பொது வழி, மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும் மற்றும் எல்லைகள்: வடக்கில்: பாண்டி அவர்களின் சொத்து, தெற்கில்: சாந்தி அவர்களின் சொத்து, கிழக்கில்: பாண்டி அவர்களின் சொத்து, மேற்கில்: நடைபாதை. அளவுகள்: தெற்கு பகுதியில் உள்ள 1வது தாக்கு : கிழக்கு மேற்காக வடக்கில்: 5.6 மீட்டர், தெற்கில்: 6.5 மீட்டர், தெற்கு வடக்காக கிழக்கில்: 3.6 மீட்டர், மேற்கில்: 3.6 மீட்டர், மொத்தம்: 21.96 சதுர மீட்டர், அளவுகள்: தெற்கு பகுதியில் உள்ள 2வது தாக்கு : கிழக்கு மேற்காக வடக்கில்: 19.0 மீட்டர், தெற்கில்: 20.0 மீட்டர், தெற்கு வடக்காக கிழக்கில்: 13.5 மீட்டர், மேற்கில்: 13.5 மீட்டர், மொத்தம்: 256.5 சதுர மீட்டர், இரண்டு தாக்குகள் சேர்த்து மொத்தம் 2997 சதுர அடி (278.56 சதுர மீட்டர்) இந்த சொத்து மதுரை தெற்கு பதிவு மாவட்டம் மற்றும் திருமங்கலம் துணைபதிவு மாவட்டத்திற்குட்பட்டது.	
	கோரிக்கை அறிவிப்பு தேதி/தொகை 26-12-2022 & ரூ.15,22,236/-	சுவாதீன தேதி 07-03-2023
கிளை : திருநகர்; கணக்கு எண். SETIRNR0335456; கடன்தாரர்கள் : 1. P. தீபா 2. R. பாண்டி	பெரியகுளம் பதிவு மாவட்டம் மற்றும் சிந்துபட்டி துணைபதிவு மாவட்டத்திற்குட்பட்ட மதுரை மாவட்டம், திருமங்கலம் தாலுகா, வையைகுளம் கிராமம், அயன் புஞ்சை சர்வே எண் 39/5C-ன்படி 0.15.5 ஹெக்டேர் (38 சென்ட்) இதில் வடக்கு பகுதியில் உள்ள 15 சென்ட் நிலம், மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும் மற்றும் எல்லைகள்: வடக்கில்: திரு.ராமன் அவர்களின் மீதம் உள்ள பகுதி, தெற்கில்: திரு.ராமன் அவர்களின் மீதம் உள்ள பகுதி, கிழக்கில்: சிவங்கை அவர்களுக்கு சொந்தமான நிலம், மேற்கில்: லட்சுமணன் அவர்களின் நிலம், மொத்தம் 15 சென்ட் அயன் புஞ்சை.	
	கோரிக்கை அறிவிப்பு தேதி/தொகை 29-11-2022 & ரூ.2,87,131/-	சுவாதீன தேதி 05-03-2023

தேதி : 11.03.2023
இடம் : மதுரை
அதிகாரப்பூர்வ அலுவலர், எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்

ஆக்ஸிஸ் வங்கி லிமிடெட்

பொது இ-ஏல அறிவிப்பு - அடமானம் வைக்கப்பட்ட தங்க நகைகளாகிய சொத்துகளின் விவரம்

இதனால் குறிப்பாக இவ்வங்கியில் கடன் பெற்ற கடன்தாரர்களுக்கும், பொதுவாக பொதுமக்களுக்கும் தெரிவிப்பது என்னவெனில் கிழே குறிப்பிட்டுள்ள ஆக்ஸிஸ் வங்கிக் கிளையில் அடமானம் வைக்கப்பட்ட கீழ் குறிப்பிட்டுள்ள கணக்குகளில் உள்ள தங்க நகைகள் கீழ்கண்ட கிளைகளில் வைத்து பொது ஏலத்தின் மூலம் விற்பனை செய்ய உத்தேசித்துள்ளோம் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள் ஆக்ஸிஸ் வங்கி லிமிடெட்டில் தமது தங்க ஆபரணங்களை வங்கியிடம் அடமானம் வைத்து கீழ் குறிப்பிட்டவாறு கடன் வசதி பெற்றுள்ளனர். கடன்தாரர், உத்தரவாதமளித்தவர்களிடம், அவர்கள் பெற்ற தங்கக் கடன் வசதியின் கீழ் நிலுவையிலுள்ள தொகையை திரும்பச் செலுத்தக் கோரி கடன்தாரர்கள்/ உத்தரவாதமளித்தவர்களுக்கு கேட்பு அறிவிப்புகள் அனுப்பப்பட்டது. ஆனால் கடன்தாரர்கள் / உத்தரவாதமளித்தவர்கள் நிலுவையிலுள்ள கடன்தொகையை திரும்பச் செலுத்தத் தவறியதால் வங்கி வேறுவழியின்றி நிர்ப்பந்த நிலையில் அடமானம் வைத்துள்ள தங்க நகைகளை இ-ஏலம் மூலம் விற்பனை செய்யத் தீர்மானித்துள்ளது. அதிலும் குறிப்பாக கீழே குறிப்பிட்டுள்ள அட்டவணையில் உள்ள தங்க நகை இனங்களை **21.3.2023 ; செவ்வாய்க்கிழமை அன்று பிற்பகல் 12.30 மணி முதல் பிற்பகல் 3.30 மணியளவில் "எங்குள்ளதோ அங்கு", "என்ன உள்ளதோ அது", "உள்ளது உள்ளவாறு", "மீளப் பெற இயலாது"** என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்பட உள்ளது.

கடனாளிகளின் விபரமும், நிலுவைத் தொகையும்.

Sr. No.	Branch Name	Customer Name	Loan A/c No.	Amount Outstanding Rs.	Date of Demand Notice	Gross Weight (gms)	Net Weight (gms)
1	SRIVILLIPUTHUR TN	MUNIYASAMY V	xxxxxxxxxxx17972	241832	08-02-2023	71.400	71.000
2	RAMANATHAPURAM [TN]	LAKSHMANAN .	xxxxxxxxxxx80788	180000	08-02-2023	53.600	52.500
3	CUMBUM [TN]	AHAMED JAMEETH P	xxxxxxxxxxx71402	113423	08-02-2023	32.000	32.000
4	MELUR TN	RAMU R	xxxxxxxxxxx19602	64800	09-01-2023	20.400	20.400
5	THIRUKKURUNGUDI [TN]	THAMAYANTHI	xxxxxxxxxxx17817	58071	08-02-2023	16.600	16.400

ஆக்ஸிஸ் வங்கியானது ஒரு கணக்கை ஏலத்திலிருந்து விலக்கவோ/ஏல தேதியை எவ்வித முன் அறிவிப்பு இன்றி மாற்றவோ அதிகாரம் கொண்டுள்ளது. ஏலம் ஆன்லைனில் **https://gold.samil.in** (ஆன் லைன் விற்பனையாளரின் இணையதளம்) தத்தில் பிற்பகல் 12.30 லிருந்து பிற்பகல் 3.30 மணியளவில் நடைபெறும். ஏல விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள இணையதளத்தை (**https://gold.samil.in** ஆன் லைன் விற்பனையாளரின் இணையதளம்) லாக் ஆன் செய்யவும்.

இடம் : தமிழ்நாடு

ஆக்ஸிஸ் வங்கி லிமிடெட்
அதிகாரபூர்வ அதிகாரி

திருவையாறு தேர்வுநிலை பேரூராட்சி, தஞ்சாவூர் மாவட்டம்

ந.க.எண். அ1/198-2023 — ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு — நாள் : 10.03.2023

திருவையாறு தேர்வுநிலை பேரூராட்சியில் 2022-2023ஆம் ஆண்டு Amrut 2.0 திட்டத்தின் கீழ் பின்வரும் பணிகளுக்கு ... ஒப்பந்தப்புள்ளிகள் 12.04.2023 புதன் கிழமை பிற்பகல் 3.00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். அன்றைய தினம் பிற்பகல் 3.30 மணிக்கு வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வ. எண்.	பணியின் பெயர்	மதிப்பீடு தொகை ரூ. கோடிகளில்	முன் வைப்புத் தொகை ரூ.	பணி முடிக்க வேண்டிய காலம்
1.	திருவையாறு தேர்வுநிலை பேரூராட்சி பகுதிகளில் குடிநீர் விநியோக திட்டத்தை மேம்படுத்துதல்	19.57	19,57,000	12 மாதங்கள்

- ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 10.03.2023 பிற்பகல் 3.00 மணி முதல் http://tntenders.gov.in/ என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
- முன் வைப்புத் தொகை "செயல் அலுவலர், திருவையாறு தேர்வுநிலை பேரூராட்சி" என்ற பெயரில் (DD / Banker Cheque) ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்கப்பட வேண்டும்.

திருமதி. கஸ்தூரி நாகராஜன், தலைவர், திருவையாறு தேர்வுநிலை பேரூராட்சி — செ.ம.தொ.இ/1617/ஒப்பந்தப்புள்ளி/2023 — திரு. தி. சோமசுந்தரம், செயல் அலுவலர், திருவையாறு தேர்வுநிலை பேரூராட்சி

பொது அறிவிப்பு

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம், சுண்டகோட்டை கிராமம் புல எண்கள் 40/1,2,3&4 ஆகியவற்றில் 1.29.50 ஹெக்டர் பரப்பளவில் 5 வருடங்களுக்கு சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி நடத்த அனுமதி வழங்கி மாநில சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம், தமிழ்நாடு கடித எண் Lr.No.SEIAA-TN/F.No.8347/EC.No:5514/2022 நாள் 21.02.2023 (Website http://environmentclearance.nic.in) சுற்றுச்சூழல் தடையின்மை சான்று வழங்கியுள்ளது.

இப்படிக்கு
திரு எஸ்.கே.சுப்பாரெட்டியார்
99, கீழக்கரந்தை காமாட்சி செட்டியார் தெரு, தெற்கு வீதி, அருப்புக்கோட்டை நகர், விருதுநகர் மாவட்டம் - 626101

PARAS — பிரித்வி அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் அண்ட் செக்யூரிடைசேஷன் கம்பெனி (இந்தியா) லிட., பதிவு & நிறுவன அலுவலகம்: D.No.1-55, ராஜ் பிரசாதம், 4-வது தளம், விங் 1, மஸ்ஜித் பண்டா சாலை, கொண்டபூர், ஹைதராபாத் 500084, CIN: U67120TG2007PLC053327, தொ.பே 040-41413333 தொ.பே 040-41413301, இ-மெயில்: co@paras.org.in இணையதளம்: www.paras.org.in

M/s. KMM டிரேடர்ஸ் அவர்களின் கணக்கில் அசையா சொத்துகள் விற்பனைக்கான E-ஏலம்

M/s. KMM டிரேடர்ஸ் அவர்களின் கணக்கில் அசையா சொத்துகள் விற்பனைக்கான E-ஏல விற்பனை அறிவிப்பு: 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்க விதிகள் 9(1) மற்றும் 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்க விதிகள் 8(6)-ன் கீழ்.

... (PARAS) (Secured Creditor) ... அடையாள (Symbolic Possession) ... ரூ.7,86,64,881/- ... 17.04.2023 அன்று விற்கப்படும்.

அசையா சொத்துகள் விவரம்

இனம் எண்	சொத்து விவரம்
1	சொத்து அமைவிடம், திண்டுக்கல் மாவட்டம், பழனி தாலுக்கா, பழனி கிராமம், TS.எண்.1160/2, கிழவடம்போக்கி தெரு, கதவு எண்.35, வார்டு எண்.4, பிளாக் எண்.13, இந்த நிலத்தின் பரப்பளவு 3488 சதுர அடி மற்றும் RCC கட்டிடம் மற்றும் எல்லைகள்: வடக்கு: TS.எண்.1163/2, முருகேசன் நாடார் கட்டிடம், தெற்கு: TS. எண் 1164, கிழவடம்போக்கி தெரு மற்றும் நகராட்சி கிழக்கு-மேற்கு சாலை, கிழக்கு: TS.எண்.1160/2, ... மற்றும் பிறர் வீடுகள், மேற்கு: TS. எண். 1160/2, ... சொத்து மற்றும் பாதை.
2	சொத்து அமைவிடம், திண்டுக்கல் மாவட்டம், பழனி தாலுக்கா, பழனி கிராமம், கிழவடம்போக்கி தெரு, TS.எண்.1197/2, மனை எண்கள்.12, 13, 14, 15 மற்றும் 16 கவுண்டர் இட்டேரி, பழனி, திண்டுக்கல் மாவட்டம் பரப்பளவு 10640 சதுர அடி மற்றும் எல்லைகள்: ... TS. எண்.1197/2; ... TS.எண்.1197/2, ... 1197/2 திரு மதி. M.கற்பகம் அவர்களுக்கு சொந்தமானது மற்றும் கிழக்கு மேற்கு 10 அடி அகல பொதுவான பாதை வழி.
3	வணிகச் சொத்து, நிலம் மற்றும் கட்டடங்களை உள்ளடக்கியது, திண்டுக்கல் மாவட்டம், பழனி பதிவு மாவட்டம், ... பழனி தாலுக்கா, ... கிராமம் இந்த நிலத்தின் பரப்பளவு ஏக்கர் 3.58 சென்ட் RS .எண்.357/1, பழனி டவுன் மற்றும் எல்லைகள்: வடக்கில்: கிழக்கு-மேற்கு சாலை, கிழக்கில்: ச.எண்.357/2ல் கற்பகம் அவர்களுக்கு சொந்தமான நிலம், தெற்கில்: தங்காராஜ் நிலம், மேற்கில்: தங்காராஜ் மற்றும் பிறருக்குச் சொந்தமான நிலம் மற்றும் பொதுப் பாதை

அட்டவணை சொத்துகள் 'ஆன்லைன் ஈ விற்பனை மூலம்' சேவை வழங்குனரின் இணையதளம் (https://www.bankeauctions.com) ...

இனம் எண்	ரிசர்வ் விலை	EMD தொகை	ஏலம் சமர்ப்பிக்க இறுதித் தேதி	E-ஏலத் தேதி	E-ஏல நேரம்	ஏல அதிகரிப்புத் தொகை
1	ரூ.1,02,00,000/- (ரூபாய் ஒரு கோடியே இரண்டு லட்சம் மட்டுமே)	ரூ.10,20,000/- (ரூபாய் பத்து லட்சத்து இருபதாயிரம் மட்டும்)	15.04.2023	17.04.2023	காலை 11.30 - பகல் 12.30 மணி*	ரூ 5 லட்சம்
2	ரூ.88,50,000/- (ரூபாய் எண்பத்து எட்டு லட்சத்து ஐம்பது ஆயிரம் மட்டும்)	ரூ.8,85,000/- (ரூபாய் எட்டு லட்சத்து எண்பத்தைந்து ஆயிரம் மட்டும்)	15.04.2023	17.04.2023	பிற்பகல் 1.00-2.00 மணி*	ரூ 3 லட்சம்
3	ரூ.1,18,00,000/- (ரூபாய் ஒரு கோடியே பதினெட்டு லட்சம் மட்டும்)	ரூ.11,80,000/- (ரூபாய் பதினொரு லட்சத்து எண்பதாயிரம் மட்டும்)	15.04.2023	17.04.2023	பிற்பகல் 2.30-3.30 மணி*	ரூ 5 லட்சம்

வ.எண்	நீதிமன்றம்	வழக்கு எண்	நிலை
1	கடன் வசூல் தீர்ப்பாயம், மதுரை	SA12/2019	நிலுவையில்
2	கடன் வசூல் தீர்ப்பாயம், மதுரை	SA 265/2019	நிலுவையில்

ஆர்வமுள்ள பங்கேற்பாளர்கள்/ஏலதாரர்கள் https://www.bankeauctions.com என்ற இணையதளத்தின் மூலம் ... www.paras.org.in/tenders ...

தேதி:06-03-2023 இடம்:ஹைதராபாத் — ஒம்/- அதிகாரபூர்வ அலுவலர்

அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில்
பண்ணாரி, சத்தியமங்கலம் வட்டம், ஈரோடு மாவட்டம் - 638 401.
தொலைபேசி எண். 04295 - 243 289 நாள் : 10.03.2023

2023ம் ஆண்டு குண்டம் பெருந்திருவிழா பணிகளுக்கான குறுகிய கால மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
2023-ம் ஆண்டு பங்குனி குண்டம் பெருந்திருவிழாவை முன்னிட்டு கீழ்காணும் இனத்திற்கான ஒப்பந்தப்புள்ளிகள் தகுதி வாய்ந்தோரிடமிருந்து வரவேற்கப்படுகிறது.
பணிகளுக்கான மறு ஒப்பந்தப்புள்ளி

வ. எண்	பணிகள் விவரம்	வைப்புத் தொகை (வரைவோலை) ரூ.
1	திருவிழா தற்காலிக கடைகள் வைப்பவர்களிடம் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம்	5,00,000/-

ஒப்பந்தப்புள்ளி படிவம் திருக்கோயில் அலுவலகத்தில் 11.03.2023 முதல் அலுவலக வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் (காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி முடிய) நேரில் பெறலாம். ஒப்பந்தப்புள்ளி படிவத்தின் விலை ரூ.500/-
ஒப்பந்தப்புள்ளி படிவம் கிடைக்கும் கடைசி நாள் : 16.03.2023 மாலை 5.45 வரை
பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி கொடுக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் வரை : 17.03.2023 பிற்பகல் 12.00 மணி
வரப்பெற்ற மறு ஒப்பந்தப்புள்ளி திறப்பு 17.03.2023 அன்று பிற்பகல் 12.30 மணிக்கு இத்திருக்கோயில் தங்கத்தேர் முன்பு மண்டபத்தில் துறை அலுவலர்கள், பரம்பரை அறங்காவலர்கள், ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் நடைபெறும். இது குறித்தான விபரத்தினை www.tn.hrce.org என்ற இணையதள முகவரியில் www.tender.tn.gov.in பதிவிறக்கம் செய்து நிபந்தனைகளை தெரிந்து கொள்ளலாம்.

இரா.மேனகா, துணை ஆணையர் / செயல் அலுவலர்

MANAPPURAM FINANCE LTD.
CIN-L65910KL1992PLC006623
IV/470A (old) W638A(New), Manappuram House, Valapad, Thrissur, Kerala - 680 567.

தங்க நகைகள் பொது ஏலம்

நகைகளை அடமானம் வைத்திருப்போர் மற்றும் குறிப்பாக பொதுமக்களுக்கு இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், கீழ்க்கண்ட கணக்குகளில் அடமானம் வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளுக்கான பொது ஏலம் கீழ்க்கண்ட கிளைகளில் 27.03.2023 தேதி அன்று காலை 10 மணி யில் இருந்து நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. தங்க நகைகளை மீட்க தவறிய வாடிக்கையாளர்களின் நகைகளை, அவர்களுக்கு பதிவு தபால்கள் அனுப்பிய பிறகும், நினைவுபடுத்திய பிறகும், நாங்கள் தங்க நகைகளை ஏலம் விடுகிறோம். ஏலம் போகாத தங்க நகைகளை எவ்வித முன்னறிவிப்பின்றி எந்த ஒரு இதர நாளிலும் ஏலம் விடப்படும். ஏலம் விடப்படும் இடம் அல்லது தேதியில் ஏதேனும் மாற்றங்கள் (இருந்தால்) அவை பற்றிய அறிவிப்பு ஏலம் நடக்குமிடத்தில் எழுதி வைக்கப்படும் மற்றும் இணையதளத்தில் வெளியிடப்படும். வேறு எந்த முன்னறிவிப்பும் அளிக்கப்படாது.

அடமானங்களின் பட்டியல் :
திண்டுக்கல், வத்தலகுண்டு, 101280700044186, சிவகங்கா, இளையான்குடி, 124230700006063, 5131, தேனி, போடிநாயக்கனூர், 102570700765845, விருதுநகர், விருதுநகர், 105000700703353,

விருப்பமுள்ள ஏலதாரர்கள் ரூ.10,000/- ஏலம் தொடங்கும் நாள் பிணையத்தொகையாக (EMD) ஏலம் தொடங்கும்முன்பு செலுத்த வேண்டும் (ஏலத்தில் வெற்றி பெறாத ஏலதாரர்களுக்கு இந்த தொகை திருப்பி அளிக்கப்படும்). ஏலதாரர்கள் உரிய அடையாள அட்டை / பான் கார்டு கொண்டு வர வேண்டும். கூடுதல் விபரங்களுக்கு தயவுசெய்து தொடர்பு கொள்க 08714603282

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
மணப்புரம் பைனான்ஸ் லிமிடெட்டுக்காக